இந்திய உச்ச நீதிமன்றம்

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு

குற்றவியல் மேல்முறையீடு எண் 216/2015

கலாபாய் ஹமீர்பாய் கச்சோட் .....மேல்முறையீட்டாளர்

எதிர்

குஜராத் மாநில அரசு .....எதிர்மேல்முறையீட்டாளர்

உடன்

குற்றவியல் மேல்முறையீடு எண் **453/2021**

(சிறப்பு அனுமதி மனு (கு) எண் 3227/2015-லிருந்து எழுகிறது)

மற்றும்

குற்றவியல் மேல்முறையீடு எண் 290/2018

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர். சுபாஷி ரெட்டி

1. **சி.அ.ம. (குற்ற) எண்** 3227/2015-**இல் அனுமதி வழங்கப்பட்டது.**

2. **குற்றவியல் மேல்முறையீடு எண்கள்** 405/2010 **மற்றும்** 459/2010-**இல் அகமதாபாத்தில் உள்ள குஜராத் உயர் நீதிமன்றத்தால்** 9.5.2014-**ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட பொதுத் தீர்ப்புரையை எதிர்த்துரைத்து இவ்வனைத்து குற்றவியல் மேல்முறையீடுகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்ற வகையில், அவையாவும் ஒன்றாக கேட்கப்பட்டு இந்தப் பொதுத் தீர்ப்புரையின் மூலம் தள்ளுபடி செய்யப்படுகின்றன.**

3. **குற்றவியல் மேல்முறையீடு எண்** 290/2018, 1-**ஆம் எதிரியான வஜ்ஷிபாய் ராம்ஷிபாய் கச்சோட்டால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது; சி.அ.ம. (குற்ற) எண்** 3227/2015-**லிருந்து எழும் குற்றவியல் மேல்முறையீடு, 2-ஆம் எதிரியான**

முலுபாய் மார்கிபாய் நந்தனியாவால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது; மற்றும் குற்றவியல் மேல்முறையீடு எண் 216/2015, 3-ஆம் எதிரியான கலாபாய் ஹமீர்பாய் கச்சோட்டால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.வசதியின்பொருட்டு, மேற்படி மேல்முறையீடுகளில் உள்ள மேல்முறையீட்டாளர்கள் இதன்பிறகு 1 முதல் 3 வரையிலான எதிரிகளாகக் குறிப்பிடப்படுவர்.

4. மேற்படி மேல்முறையீட்டாளர்கள், இந்திய தண்டனைச்சட்டம் (இ.த.ச.) பிரிவுகள் 302, 326, 324 மற்றும் 34 மற்றும் பம்பாய் காவல்துறை சட்டத்தின் பிரிவு 135-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்காக கெஷோட் காவல்நிலையத்தின் கோப்பிலுள்ள 11.11.2006-ஆம் தேதியிடப்பட்டு, பதிவுசெய்யப்பட்ட மு.த.அ.எண் I-215/2006-இன் எதிரிகளாவர்,அதில் கெஷோட்முதல் வகுப்பு குற்றவியல் நடுவரின் நீதிமன்றத்தில் 7.2.2007 அன்று குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது, அக்குற்றங்கள் அமர்வுநீதிமன்றத்தால் விசாரிக்கத்தக்கது என்னும் காரணத்தினால், வழக்கானது ஜூனாகத் கூடுதல் அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, எதிரிகள் மேற்கூறிய குற்றங்களுக்காக அமர்வு வழக்கு எண் 14/2007-இல் விசாரிக்கப்பட்டனர். அனைத்து எதிரிகளும் இ.த.ச., பிரிவு 302 உடன் பிரிவு 34 மற்றும் பம்பாய் காவல்துறைச் சட்டம், பிரிவு 135(1)-இன் கீழான குற்றங்களுக்காக தண்டனைத் தீர்ப்பிடப்பட்டனர். 1-ஆம் எதிரியான வஜ்ஷிபாய் ராம்ஷிபாய் கச்சோட், இ.த.ச., பிரிவு302 உடன் பிரிவு 34-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்காக குற்றவாளியெனத் தீர்மானிக்கப்பட்டு, ஆயுட்கால சிறைத்தண்டனை அனுபவிக்கவும், மேலும், ரூ.10,000/- அபராதம் செலுத்தவும், தவறினால், மேற்கொண்டு 12மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்கவும் தண்டனைத் தீர்ப்பிடப்பட்டார்.மேலும், அவர் இ.த.ச., பிரிவு 324-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்காக குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டு, ரூ.3,000/- அபராதம் செலுத்தவும், தவறினால், மேற்கொண்டு ஆறு மாதங்கள் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்கவும் தண்டனைத் தீர்ப்பிடப்பட்டார். அவர் பம்பாய் காவல்துறைச் சட்டத்தின் பிரிவு 135(1)-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்காகவும்

குற்றவாளியெனத் தீர்மானிக்கப்பட்டு, நான்கு மாதங்கள் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும், ரூ.100/- அபராதம் செலுத்துமாறும் தவறும்பட்சத்தில், மேலும் 10 நாட்களுக்கு சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் தண்டிக்கப்பட்டார். 2-ஆம் எதிரியான முலுபாய் மார்கிபாய் நந்தனியா, இ.த.ச., பிரிவு 302 உடன் பிரிவு34-இன் கீழான குற்றத்திற்காக குற்றவாளியெனத் தீர்மானிக்கப்பட்டு, ஆயுட்காலகடுங்காவல் தண்டனை அனுபவிக்கவும், ரூ.10,000/- அபராதம் செலுத்தவும், தவறினால், மேற்கொண்டு 12 மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்கவும் தண்டனைத் தீர்ப்பிடப்பட்டார். மேலும் அவர், பம்பாய் காவல்துறைச் சட்டம், பிரிவு135(1)-இன் கீழ் தண்டிக்கத்தக் குற்றத்திற்காக குற்றவாளியெனத் தீர்மானிக்கப்பட்டு நான்கு மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்கவும், ரூ.100/- அபராதம் செலுத்தவும், தவறும்பட்சத்தில், மேற்கொண்டு பத்து நாட்கள் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்கவும் தண்டனைத் தீர்ப்பிடப்பட்டார். 3-ஆம் எதிரியான கலாபாய் ஹமீர்பாய் கச்சோட், இ.த.ச., பிரிவு 302 உடன் பிரிவு 34-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்காக குற்றவாளியெனத் தீர்மானிக்கப்பட்டு, ஆயுட்கால கடுங்காவல் தண்டனை அனுபவிக்கவும், ரூ.10,000/- அபராதம் செலுத்தவும், தவறினால், மேலும் 12 மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்கவும் தண்டனை விதிக்கப்பட்டார்.அவர் பம்பாய் காவல்துறைச் சட்டம் 135(1)-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்காகவும் குற்றவாளியெனக் கண்டறியப்பட்டு நான்கு மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும், ரூ.100/- அபராதம் செலுத்துமாறும், தவறினால், மேலும் 10 நாட்களுக்கு சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் தண்டனைத் தீர்ப்பிடப்பட்டார். கற்றறிந்த அமர்வு நீதிபதி, இ.த.ச., பிரிவுகள் 326, 324 உடன் பிரிவு 34-இன் கீழான குற்றங்களிலிருந்து 2 மற்றும் 3-ஆம் முதன்மை எதிரிகளை விடுவித்தார். அறிவார்ந்த அமர்வு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவை எதிர்த்து உயர் நீதிமன்றத்தின் முன்பாக 1 மற்றும் 3-ஆம் எதிரிகள் குற்றவியல் மேல்முறையீடு எண் 459/2010-யும், 2-ஆம் எதிரி குற்றவியல் மேல்முறையீடு எண் 405/2010-யும் தாக்கல் செய்தனர்.

5. உயர் நீதிமன்றம் எதிர்ப்புக்குள்ளான பொதுத் தீர்ப்புரையின் மூலம் தண்டனைத் தீர்ப்பை உறுதிசெய்கையில் மேல்முறையீடுகளைப் பகுதியாக அனுமதித்ததுடன், எதிரிகளுக்கு விதிக்கப்பட்ட தண்டனை அனைத்தையும் ஒருங்கியல்வாக அனுபவிக்கவேண்டும் என உத்தரவிட்டு, குற்றவியல் விசாரணைமுறைச் சட்டத்தின் பிரிவு 428-இன் பயனை வழங்கும்வகையில், எதிரிகள் விசாரணைக் கைதிகளாக காவலில் இருந்த காலத்தை தண்டனைக் காலத்திலிருந்து நீக்கவேண்டும் எனவும் உத்தரவிட்டது.

6. கெஷோட் தாலுக்கா, பம் நாசா கேட்டில் குடியிருப்பவரான இராஜ்ஷிபாய் மால்திபாய் கரங்கியா, தான் பம்நாசா கேட்டில் குடும்பத்துடன் வசிப்பதாகவும், விவசாயம் செய்துவருவதாகவும், அகா கிராமத்தின் எல்லையில் அமைந்துள்ள பழத்தோட்டத்தில் குடியிருப்பதாகவும் தெரிவித்து, 10.11.2006 அன்று ஜூனாகத் ' பி ' பிரிவின் துணை காவல் ஆய்வாளரிடம் முறையீடு அளித்தார்.அவரது முறையீட்டில் 10.11.2006 அன்று மாலை சுமார் 5.00 மணியளவில் இராஜ்ஷிபாய் மால்திபாய் கரங்கியா, மிதேஷ் ஹர்தஸ்பாய் மற்றும் கோகல்பாய் கர்சன்பாய் ஆகியோர் கோகல்பாயின் ஹீரோ ஹோண்டா மோட்டார் சைக்கிளில் குறிப்பிட்ட பணிநிமித்தமாக கெஷோட்டுக்குச் சென்றதாக அவர் தெரிவித்திருந்தார்.கோகல்பாய் மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்தார்.அவர்கள் திரும்பி வந்துகொண்டிருக்கையில் மாலை சுமார் 7.15 மணியளவில் கலாபாயின் பழத்தோட்டத்தின் அருகே வந்தடைந்தபோது வஜ்ஷிபாய் ராம்ஷிபாய், முலுபாய் மார்கிபாய் மற்றும் கலாபாய் ஹமீர்பாய் கச்சோட் ஆகியோர் கோடரி மற்றும் கத்திகளுடன் காத்துக்கொண்டிருந்தனர்.இராஜ்ஷிபாய் மால்திபாய் கரங்கியாவை தடுத்துநிறுத்துவதற்காக முலுபாய் கோடரியால் தாக்கியபோது அது கோகல்பாயின் தலையில் பட்டதன் காரணமாக இராஜ்ஷிபாய் மால்திபாய் கரங்கியா, மிதேஷ்பாய் ஹர்தஸ்பாய் மற்றும் கோகல்பாய் ஆகியோர் மோட்டார் சைக்கிளிலிருந்து கீழே விழுந்தனர்அதன்பிறகு மூன்று எதிரிகளும் மரணமுற்றவரான கோகல்பாயை கத்திகளால் தாக்கியுள்ளனர், இராஜ்ஷிபாய் மால்திபாய் இடைமறித்தபோது, இராஜ்ஷிபாய் மால்திபாய் கரங்கியாவின் தலையில் கத்தியால் வஜ்ஷிபாய் தாக்கினார்.வஜ்ஷிபாய், மிதேஷின் தலையின் பின்புறத்தில் காதின்மீதும், இடது தோளின்மீதும் கத்தியினால் தாக்கினார்

எனவும் குற்றம் சாட்டப்பட்டது. கோகல்பாய் மயக்கமுற்றார்.அதன்பின்னர் எதிரிகள் மூவரும் தப்பித்து ஓடி கலாபாயின் மோட்டார் சைக்கிளை அகாவை நோக்கி ஓட்டிச்சென்றனர். அதன்பிறகு மரணமுற்றவர் மற்றும் காயமுற்றவர்களின் உறவினர்கள் அழைக்கப்பட்டனர், அவர்கள் அரசு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர், அங்கு கோகல்பாய் மரணமுற்றதாக அறிவிக்கப்பட்டார், இராஜ்ஷிபாய் மால்திபாய் மற்றும் மிதேஷ்பாய்க்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது.சம்பவ தேதிக்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் வஜ்ஷிபாயும், முலுபாயும், கோகல்பாயுடன் சண்டையிட்டனர் என்பதே இச்சம்பவத்தின் பின்னணியில் உள்ள காரணம் எனவும் கூறப்பட்டது. எதிரிக்கும், மரணமுற்றவருக்கும் இடையேயான அத்தகைய பகைமையின் விளைவாகவே தற்போதைய சம்பவம் நடந்ததாக அவர் முறையீட்டில் குறிப்பிட்டுள்ளார்.

7. மேற்கூறப்பட்ட முறையீட்டின் அடிப்படையில் குற்றம் பதிவு செய்யப்பட்டு, தேவையான புலன் விசாரணைக்குப் பிறகு ஜூனாகத் கூடுதல் அமர்வு நீதிபதியின் முன்பாக குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.கற்றறிந்த அமர்வு நீதிபதி எதிரிகளுக்கெதிராக குற்றச்சாட்டுகளை வனைந்தார். எதிரிகள், குற்றச்சாட்டுகளை மறுத்து, விசாரணையைக் கோரியபோது அவர்களுக்கு எதிராக சாட்டுரைக்கப்பட்ட குற்றங்களுக்காக அவர்கள் விசாரிக்கப்பட்டனர்.

8. எதிரிகளுக்கு எதிராக வனையப்பட்ட குற்றச் சாட்டுகளை நிரூபிப்பதற்காக அரசுத்தரப்பில் மொத்தமாக 32 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 61 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன, விசாரணையின் முடிவில், கு.வி.மு.ச., பிரிவு 313-இன் கீழ் எதிரிகளின் வாக்குமூலத்தைப் பதிவுசெய்து, அரசுத்தரப்பு மற்றும் எதிர்த்தரப்பின் வாதங்களைக் கேட்ட பின்னர், கற்றறிந்த கூடுதல் அமர்வு நீதிபதி, மேல்முறையீட்டாளர்களான எதிரிகளை மேற்படி குற்றங்களுக்காக குற்றவாளிகளெனத் தீர்மானித்ததுடன், மேற்கூறப்பட்டவாறு தண்டனைத் தீர்வளித்தார். மேல்முறையீட்டாளர்களான எதிரிகளின்மீது விதிக்கப்பட்ட குற்ற மற்றும் தண்டனைத் தீர்ப்பினால் மனக்குறையுற்ற 1 மற்றும் 3-ஆம் எதிரிகள், குற்றவியல் மேல்முறையீடு எண் 459/2010-யும்,

மேலும் 2-ஆம் முதன்மை எதிரி குற்றவியல் மேல்முறையீடு எண் 405/2010-யும் உயர் நீதிமன்றத்தின் முன்பாக முன்கொணர்ந்தனர். உயர் நீதிமன்றம் தண்டனைத் தீர்ப்பை உறுதிசெய்கையில், கு.வி.மு.ச., பிரிவு 428-இன் பயனை வழங்கி, பொதுத் தீர்ப்புரையின்வாயிலாக மேலே குறிப்பிட்ட அளவுக்கு மட்டுமே மேல்முறையீடுகளைப் பகுதியாக அனுமதித்தது.

9. **நாங்கள் குற்றவியல் மேல்முறையீடு எண்** 216/2015-**இல் மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. ஹரின் பி. ராவல் மற்றும் குற்றவியல் மேல்முறையீடு எண்** 290/2018-**இல் மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. டி.என். ரே மற்றும் சி.அ.ம. (கு) எண்** 3227/2015-**லிருந்து எழும் குற்றவியல் மேல்முறையீட்டில் மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. நச்சிகேதா ஜோஷி மற்றும் எதிர்மேல் முறையீட்டாளரான மாநில அரசுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திருமதி/செல்வி.விஷாகா ஆகியோரின் வாதங்களை கேட்டோம்.**

10. மேல்முறையீட்டாளர்களான எதிரிகளின் தண்டனைத் தீர்ப்பானது, காயமடைந்த சாட்சிகளான அ.சா .18 மற்றும் அ.சா .19-இன் வாக்குமூலத்தை முதன்மையாகக் கொண்டதாகும் என்று கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. ஹரின் ராவல் வாதுரைத்தார்.அவர்களின் சான்றுரைகளைக் கவனமாக ஆராய்ந்தால், அதில் முக்கியமான முரண்பாடுகள் உள்ளதென வாதிடப்பட்டது.அவர்கள் சந்தர்ப்ப சாட்சிகளே என்றும், அவர்களின் சாட்சியம் மேல்முறையீட்டாளர்களான எதிரிகளின் தண்டனைத் தீர்ப்புக்கு அடிப்படையாக அமைவதற்கு நம்பத்தகுந்ததல்ல என்றும் வாதுரைக்கப்பட்டது. சடலக்கூறாய்வு அறிக்கையில் காயங்களின் தன்மையைக் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை எனவும், மேலும் குற்றச் செய்கையில் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் கைப்பற்றப்படவில்லை எனவும் பணிந்துரைக்கப்பட்டது.மேலும், இறந்துபோன நபரின் தலையில் எதிரியால் விளைவிக்கப்பட்ட காயம் இருந்தது என்பது அரசுத்தரப்பு வழக்காக இருந்தாலும், மரணமுற்றவரின் சடலக்கூறாய்வு அறிக்கையில் அதற்கு ஒத்துப்போகிற மருத்துவரீதியிலான காயமேதும் இல்லையெனவும் வாதிடப்பட்டது.சடலக் கூறாய்வு அறிக்கை உள்ளிட்ட மருத்துவப் பதிவுருக்கள்

நம்பத்தக்கவையல்ல என்றும், அரசுத்தரப்பு, வழக்கினை நியாயமான சந்தேகங்களுக்கிடமின்றி நிரூபிக்கத் தவறிவிட்டது என்றும் வாதுரைக்கப்பட்டது.எனவே, அவர் எதிரிகளுக்கு சந்தேகத்தின் பலனை வழங்கி, அவர்களின் தண்டனைத் தீர்ப்பினை நீக்கறவு செய்யுமாறும் வேண்டினார்.அவரது வாதுரைகளுக்கு ஆதரவாக கற்றறிந்த வழக்குரைஞர், **ஆனந்த இராமச்சந்திர சௌகுலே முதலானோர் எதிர்-சித்தரை லஷ்மண் சௌகலா மற்றும் பலர் [(2019) 8 எஸ்.சி.சி .50 (ஏ.ஐ.ஆர் 2019 எஸ்.சி 3871)]; அகுலா வீர வெங்கட சூர்ய பிரகாஷ் என்கிற பாபி -எதிர்-அரசு குற்றவியல் வழக்குரைஞர், ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம் [(2009) 15 எஸ்.சி.சி. 246 (ஏ.ஐ.ஆர் ஆன்லைன் 2009 எஸ்.சி 284)] மற்றும் மொஹிந்தர் சிங் மற்றும் ஒருவர் -எதிர்-பஞ்சாப் மாநில அரசு மற்றும் பலர் [(2004) 12 எஸ்.சி.சி. 311: (ஏ.ஐ.ஆர் 2003 எஸ்.சி 4339)] ஆகிய வழக்குகளில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரைகளின் மீது சார்வுற்றார்.**

11. குற்றவியல் மேல்முறையீடு எண் 290/2018-இல் மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. டி.என். ரே வாதிட்டது யாதெனில், மரணமுற்றவரின்மீது விளைவிக்கப்பட்ட மரணக் காயம், மேல்முறையீட்டாளர்களுள் ஒருவரால் விளைவிக்கப் பட்டிருந்ததாகக் கூறப்பட்டாலும், மரணமுற்றவருடன் அதே மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களான காயமுற்ற சாட்சிகள் எனக் கூறப்படும் அ.சா.18 மற்றும் அ.சா .19-இன் மீது இரத்தக் கறைகள் இல்லை என்பதாகும்.மரணமுற்றவரும், காயமுற்றவர்களும் மாருதி காரில் கொண்டு செல்லப்பட்டனர் என்றும், ஆனால், காரில் இரத்த தடயங்கள் இல்லை என்றும் பணிந்துரைக்கப்பட்டது. அ.சா .18 மற்றும் 19-இன் மீதும் இரத்தம் காணப்படவில்லை, மேலும் அவர்கள் அடைந்த காயங்கள் மேலீடானவையே. குறிப்பிடப்பட்ட சம்பவம் நவம்பர் மாதத்தில் இரவு சுமார் 7.30 மணியளவில் நடந்துள்ளது எனும்போது எதிரிகளை இருளில் அடையாளங்காண்பதற்கு சாத்தியமில்லை எனவும் வாதிடப்பட்டது. மருத்துவரின் சாட்சியத்தின்படி, மரணமுற்றவரின் தலையில் காயம் காணப்படவில்லை என்பதாகவும் பணிந்துரைக்கப்பட்டது.மரணமுற்றவருக்கு தொகை ரூ.15,000/-கொடுக்கவேண்டும் என்னும் உட்கருத்திருந்ததாகச்

சொல்லப்பட்டாலும், மேற்படி நிகழ்வு, இச்சம்பவ தேதிக்கு சுமார் எட்டு மாதங்கள் முன் நடந்திருந்ததால் அது எதிரிகளின் குற்றத்தினைப் பதிவு செய்வதற்கான அடிப்படையல்ல என்பதாகும்.

12. சி.அ.ம. (குற்ற) எண் 3227/2015-லிருந்து எழுகின்ற குற்றவியல் மேல்முறையீட்டில் மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. நச்சிகேதா ஜோஷி, திரு. ஹரின் ராவல் மற்றும் திரு. டி.என். ரே ஆகியோரின் வாதங்களை ஏற்றுக்கொள்கையில் பதிவில் ஏற்கத்தக்க சான்று ஏதும் இல்லாவிட்டாலும், சாட்டுரைக்கப்பட்ட குற்றங்களுக்காக மேல்முறையீட்டாளர் தண்டனைத் தீர்ப்பிடப்பட்டார் என வாதிட்டுள்ளார்.ஒட்டுமொத்தச் சான்றினையும் கருத்திற்கொண்டு பார்த்தால், எதிரிகளுக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றி மெய்ப்பிக்கப்படவில்லை என்றும், உயர் நீதிமன்றமுங்கூட மேல்முறையீட்டாளரான எதிரிகளால் எழுப்பப்பட்ட காரணங்களைச் சரியான கோணத்தில் பரிசீலிக்காமல் மேல்முறையீடுகளைத் தள்ளுபடி செய்துள்ளது என்றும் அவர் பணிந்துரைத்தார்.

13. அதற்குமாறாக, எதிர்மேல்முறையீட்டாளரான மாநில அரசுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திருமதி/செல்வி.விஷாகா, மேல்முறையீட்டாளர்களுக்கு எதிரான தண்டனைத் தீர்ப்பின் காண்முடிவுகள் ஒருங்கியல்வாக உள்ளள எனப் பணிந்துரைத்துள்ளார். விசாரணை நீதிமன்றமே பதிவிலுள்ள வாய்மொழி மற்றும் ஆவணச் சான்றினை விரிவாக ஆராய்ந்து, சாட்டுரைக்கப்பட்ட குற்றங்களின்போல் மேல்முறையீட்டாளர்கள் குற்றவாளிகள் என்னும் முடிவுக்கு வந்துள்ளது எனவும், அதில் தலையிடுவதற்கு காரணங்கள் ஏதுமில்லை எனவும் வாதிடப்பட்டது. மேலும், 1 மற்றும் 3-ஆம் எதிரிகள் கத்திகள் வைத்திருந்ததாகவும், அவர்கள் மூவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த போது 2-ஆம் எதிரி, கோடரியால் மரணமுற்றவரின் தலையில் தாக்கியதன் மூலம் காயம் விளைவித்தார் எனவும் பணிந்துரைக்கப்பட்டது. மரணமுற்றவரின் கொலை மற்றும் அ.சா.18 மற்றும் 19-க்கு ஏற்பட்ட காயங்கள் பொதுவான உட்கருத்துடன் புரியப்பட்டுள்ளது என்றும், அவ்வகையில் அவர்கள் குற்றவாளிகளென அமர்வு நீதிமன்றத்தால் சரியாகவே தீர்மானிக்கப்பட்டதாகவும் வாதிடப்பட்டுள்ளது. மேலும் கற்றறிந்த

வழக்குரைஞர், நிகழ்விடத்திற்கு முதலில் சென்றவரும் இறந்து போனவரின் சகோதரருமான அ.சா.21-இன் வாக்குமூலத்தைக் குறிப்பிட்டுக்காட்டி, தலையின் பின்புறத்தில் கீழே காயம் உள்ளதை சடலக்கூறாய்வு அறிக்கை சுட்டிக்காட்டுவதாக பணிந்துரைத்துள்ளார்.எதிரிகள் அனைவரும் ஒருவருக்கொருவர் தெரிந்தவர்கள் மற்றும் ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களின் அடையாளத்தைக் கேள்விக்குள்ளாக்க முடியாது எனவும் வாதிடப்பட்டுள்ளது. மேலும், எதிரிகளுக்கு எதிராக வழக்கினை மெய்ப்பிக்க, மருத்துவ மற்றும் கண்ணுற்றவரின் சான்று அரசுத்தரப்பு வழக்குக்கு ஆதரவளிக்கிறது எனவும் பணிந்துரைத்துள்ளார். சான்றுரைகளில் ஏதேனும் முரண்பாடுகள் இருப்பின், அவை அற்பமானவையே என்றும், அவை அரசுத்தரப்பு வழக்கினை பாதிக்காது என்றும் கற்றறிந்த வழக்குரைஞர் இறுதியாக வாதுரைத்துள்ளார்.கற்றறிந்த வழக்குரைஞர் **மொஹர் மற்றும் ஒருவர்-எதிர்-உத்தரப்பிரதேச மாநில அரசு [(2002) 7 எஸ்.சி.சி. 606: (ஏ.ஐ.ஆர்.2002 எஸ்.சி.3279)] மற்றும் உத்தரப்பிரதேச மாநிலஅரசு -எதிர்- நரேஷ் மற்றும் பலர்[(2011)4 எஸ்.சி.சி. 324:(2011 கிரிமினல் எல்.ஜெ.2162 (எஸ்.சி.))] என்ற வழக்குகளில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரைகளின் மீது சார்வுற்றார்.**

14. அதற்குப் பதிலளிக்கும்வகையில், மேல்முறையீட்டாளர்களான எதிரிகளுக்காக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. ஹரின் ராவல் மற்றும் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. டி.என்.ரே வாதிட்டதாவது, குறிப்பிடப்பட்ட சம்பவமானது 10.11.2006 அன்று இரவு சுமார் 7.30 மணியளவில் நிகழ்ந்துள்ளது, மேலும், சாட்சியத்தின் படியுங்கூட அ.சா .18 மற்றும் 19 நிகழ்விடத்திலேயே சுமார் 45 நிமிடங்கள் இருந்தனர் என்பது அசாதாரணமானது என்பதாகும்.இத்தகைய சூழலில் காயமடைந்தவர்களான அ.சா .18 மற்றும் 19, மரணமுற்றவரை உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டுசெல்ல முயற்சி செய்திருக்கவேண்டும் என வாதிடப்பட்டது.குறுக்கு விசாரணையில் அ.சா .18 மற்றும் 19-இன் வாக்குமூலத்தினைச் சுட்டிக்காட்டி, அ.சா .18 மற்றும் 19 அடைந்த அத்தகைய காயங்கள் தானே விளைவித்துக் கொண்டவையாக இருக்கலாம் என்று பணிந்துரைக்கப் பட்டது.மேலும், வாக்குமூலங்களில் கண்டறியப்பட்ட

முரண்பாடுகள் அதிக அளவில் இருந்தன என்றும், எனவே, சந்தேகத்தின் பலனானது மேல்முறையீட்டாளர்களுக்கு செல்லவேண்டும் என்பதை வலியுறுத்தி, எதிரிகளின் விடுதலைக்காக வேண்டுரைக்கப்பட்டது.

15. நாங்கள் இரு தரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் வாதங்களைக் கேட்டறிந்து, விசாரணை நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புகளையும் பதிவிலுள்ள பிற சான்றாதாரத்தையும் நுண்ணாய்வு செய்துள்ளோம்.

16. பதிவிலுள்ள சான்றினையும், விசாரணை நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்டு உயர்நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்ட காண்முடிவுகளையும் கவனமாக ஆராய்ந்ததில், விசாரணை நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்டு, உயர்நீதிமன்றத்தால் உறுதிசெய்யப்பட்ட தண்டனைத்தீர்ப்பில் தலையிடுவதற்கு, மேல்முறையீட்டாளர்களான எதிரிகளுக்கான கற்றறிந்த வழக்குரைஞரின் வாதங்களில் நாங்கள் ஏதொரு தகுதிப்பாட்டினையும் காணவில்லை.

17. மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டுகளை மெய்ப்பிப்பதற்கு, அரசுத்தரப்பில் விசாரணையின் போது 32 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 61 ஆவணங்கள் சான்றாவணங்களாகக் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட மற்றசாட்சிகளுள், சம்பவம் நடந்தபோது மரணமுற்றவருடன் இருந்தவரான இராஜ்ஷிபாய்மால் திபாய்கரங்கியா அ.சா.18-ஆக விசாரிக்கப்பட்டார். அவருடைய வாக்குமூலத்தில், 10.11.2006 அன்று பம் நாசா-அகா சாலையில் மாலை சுமார் 7.30 மணியளவில் சம்பவம் நிகழ்ந்ததாக அவர் தெரிவித்துள்ளார். அன்றைய தினம் அவர், மிதேஷ்பாய் மற்றும் கோகல்பாயுடன் (மரணமுற்றவர்) மாலை சுமார் 5.00 மணியளவில் ஹீரோ ஹோண்டா மோட்டார் சைக்கிளில் கெஷோட்டுக்கு சென்றார். கோகல் பாய் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றார், அதன் பின்னர் மாலை சுமார் 6.45 மணியளவில் கோகல்பாயின் சகோதரர் வஜ்ஷிபாய், கோகல்பாயை தொலைபேசியில் அழைத்து, வேறொரு வேலை நிமித்தமாக செல்வதற்காக அவருக்கு மோட்டார் சைக்கிள் தேவைப்படுவதாகக் கூறியதுடன், கோகல்பாயை அவருடைய வேலை

முடிந்துவிட்டால் திரும்ப வருமாறும் கேட்டுக்கொண்டார்.ஆகவே, அவர்கள் கெஷோட்டிலிருந்து பம்நாசா கிராமத்திற்குச் சென்றனர், அவர்கள் கலாபாயின் தோட்டத்தின் அருகே சென்றபோது, காவலர் வஜ்ஷிபாய் ராம்ஷிபாய் கத்தியுடனும், முலுபாய் மார்கிபாய் கோடரியுடனும் மற்றும் கலாபாய் ஹமீர்பாய் கத்தியுடனும் அவர்களைத் தடுத்து நிறுத்துவதற்காக சாலையின் குறுக்கே நின்று கொண்டிருந்தனர். கோகல்பாய் வாகனத்தின் வேகத்தைக் குறைத்த போது கோகல்பாயின் தலையில் முலுபாய் மார்கிபாய் கோடரியால் தாக்கினார், அதனால் அவர்கள் மோட்டார் சைக்கிளிலிருந்து கீழே விழுந்தனர், அதன் பிறகு எதிரிகள் கோகல்பாயை கோடரியாலும், கத்தியாலும் கண்மூடித்தனமாகத் தாக்கத் தொடங்கினர். மேலும், அவரும் மிதேஷும் இடைமறிக்க முயன்றபோது அவர்களும் காயமடைந்ததாக சான்றுரைக்கப்பட்டுள்ளது. அதன்பிறகு அவர் பம்நாசாவில் இருந்த மசாரிபாய்க்கு அவரது தொலைபேசியில் இருந்து அழைப்புவிடுத்து, அவரை சம்பவ இடத்திற்கு வாகனத்துடன் வருமாறு வேண்டினார். அதனால், சிறிது நேரத்திற்குப் பின்பு இராஜூபாபு பாவாஜி மாருதி வேனுடன் வந்தார், இராஜூபாபுவுடன் சமத் கோவிந்தும், வஜ்சி கர்சனும் இருந்தனர். இச்சாட்சியின் கூற்றின்படியுங்கூட, சம்பவம் நடைபெறுவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பு ரூ.15,000/ வாடகை தொடர்பாக கோகல்பாய் மற்றும் வஜ்ஷிபாய்க்கு இடையே நடந்த வாய்ச்சண்டையே சம்பவத்திற்கான காரணமாகும். அது தொடர்பாக ஜூனாகத் காவல் நிலையத்தில் புகார் பதிவு செய்யப்பட்டது. சம்பவ நாளன்று மரணமுற்றவருடன் இருந்த மற்றொரு நபரான அ.சா.19 மிதேஷ் ஹர்தாஸ் கச்சோட்டும், அ.சா.18-ஐ போன்றே ஒரேமாதிரியாக சான்றளித்துள்ளார். சம்பவம் நிகழ்ந்த நாளன்று மரணமுற்றவருடன் இருந்தவர்களும், அவருடன் அதே வாகனத்தில் பயணித்தவர்களுமான அ.சா.18 மற்றும் அ.சா.19-இன் சான்றுரை இயல்பாகவும், நம்பத்தகுந்ததாகவும் உள்ளது. சம்பவம் நவம்பர் மாதத்தில் நடைபெற்றுள்ளதால், எதிரிகளை இருளில் அடையாளம் காண்பதற்கு சாத்தியமில்லை என்பது மேல்முறையீட்டாளரான எதிரிக்கான கற்றறிந்த வழக்குரைஞரின் வாதமாக இருந்தாலும், வாகனத்தின் முகப்புவிளக்கு எரிந்துகொண்டிருந்தது என்பது அதே சமயத்தில் பதிவிலுள்ள

சான்றாதாரத்திலிருந்து தெளிவாகிறது, மேலும் அங்கு வயல் வெளியில் விளக்கு இருந்ததென்பது பதிவுருக்களிலிருந்தும், சம்பவஇடத்தின் பஞ்சநாமாவில் இருந்தும் தெளிவாகிறது. எதிரிகளும், சாட்சிகளும் ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள், அது சிறிய கிராமமாக தெரிகிறது, மேலும் கிராமத்தில் வசிக்கும் நபர்கள் அடிக்கடி சந்தித்துக் கொள்வது வழக்கம், அங்குள்ள நபர்களை அடையாளங்காண்பதில் எந்தவொரு சிரமமும் இருக்காது என்பதையும் கவனிக்க வேண்டும்.

ஆகவே, எதிரிகளை அடையாளங்காண்பதைப் பொறுத்தமட்டில் அது பதிவிலுள்ள சான்றின் மூலம் நல்ல ஆதாரமாக அமைகிறது. அரசுத்தரப்பு, அ.சா.1-மருத்துவர் நிகில்குமார் பூச்சையும் விசாரித்தது, அவர் 10.11.2006 அன்று ஜூனாகத்தில் உள்ளூர் மருத்துவமனையில் பணியில் இருந்ததாகவும், அன்றைய தினம் இரவு சுமார் 10.40மணியளவில், காயமடைந்திருந்த இராஜ்ஷிமால்தே அவரது சகோதரன்/சகோதரியின் மகனான ஹிதேஷ் ஹர்தாஸால் புகாருடன் சிகிச்சைக்காக தன்னிடம் அழைத்து வரப்பட்டதாகவும், வஜ்ஷி ராம்ஷி அவரை(இராஜ்ஷி மால்தி) தாக்கியதுடன் கத்தியால் குத்தியதாக தெரிவிக்கப்பட்டதாகவும் வாக்குமூலம் அளித்துள்ளார்.சாட்சியான மருத்துவர் காயச் சான்றிதழ் வழங்கினார், அது அ.சா.ஆ.18-ஆக குறியீடு செய்யப்பட்டது. மரணமுற்றவரை சடலக் கூறாய்வு செய்த மருத்துவர் பிரஃபுலாபென் மோகன்லால் தபரியா அ.சா.2-ஆக விசாரிக்கப்பட்டார். மேற்படி சாட்சியானவர் மரணமுற்ற நபரின் மீது கீழ்க்காணும் காயங்களைக் கண்டறிந்தார்:

" (i) இடது தொடையின் நடுப்பகுதியில் ஒரு வெட்டு, குறுக்காக வெட்டுக்காயம் இருந்தது.அது தோல் மற்றும் தசையின் அளவுக்கு நீண்டிருந்தது.அது, நீள்வட்ட வடிவில் 5 அங்குல நீளமும், 1 1/2 அங்குல அகலமும் மற்றும் 3/4 அங்குல ஆழமும் உடையது.

(ii) காரை எலும்பின் மையக்கோட்டில் தொடங்கி இடது மார்பில், 6-ஆவது விலா எலும்புக்கு இடையே உள்ள பகுதியில் இருந்து கீழ்நோக்கி பக்கவாட்டு வரையில் வெட்டுக்காயம்

இருந்தது.அது 2 1/2 அங்குல நீளமும், 3/4 அங்குல அகலத்தில் குழிவறையை ஊடுருவி இருந்தது.காயத்தின் வழியாக இரத்தம் மெல்லியதாக கசிந்துக் கொண்டிருந்தது.வெளிக்காயம் தென்படவில்லை.அது இதயக் கீழறை சுவற்றில் இடது மற்றும் பின்புறம் வரையில் ஊடுருவியுள்ளது.

(iii) கழுத்தின் பின்பக்கத்தில் மிக நுட்பமான அளவில் இடதுபுறமாக நடுவில் 1/2 அங்குலத்தில் தொடங்கி வலதுபுறத்தில் 3 அங்குல நீளமுடைய, குறுக்காக நீண்டிருந்த வெட்டுக்காயம் இருந்தது.அக்காயம் 1/2 அங்குல அகலத்தில் தோல், தசைகளை வெட்டியிருந்ததுடன், கழுத்தைச்சார்ந்த முதுகெலும்பினை உராய்ந்திருந்தது.இரத்தக்கசிவு காணப்பட்டது.

(iv) மேற்படி காயத்திற்குக் கீழே கழுத்தின் வலப்பக்கத்தில் பக்கவாட்டில் 1x 1/2 x1/2 அங்குல நீளம் x அகலம் X ஆழம் என்ற அளவிலான வெட்டுக்காயம் இருந்தது.

(v) அதற்கு 1/ 2 " -க்கு கீழே அதற்கிணையாக 1 " x1/2 " x 1/2" என்ற அளவிலான வெட்டுக்காயம் இருந்தது.

(vi) கழுத்துக்கு அடியில் வலது தோள்பட்டை எலும்புக்கு சற்று மேலே முள்ளெலும்பின் விளிம்புப் பகுதிக்குப் பக்கவாட்டில் 1 " -இல் துவங்கி குறுக்காகவும், பக்கவாட்டிலும், மேல்நோக்கியும் நீண்டிருந்த வெட்டுக்காயம் இருந்தது.அது 2 " நீளம், 1 " அகலத்தில் நெஞ்சுக்குழிவறையில் ஊடுருவி இருந்தது.காயமானது மேற்புறமாக நுனிநோக்கிச் சிறியதாகச் செல்கிறது.அது வலது மேல் நுரையீரல் மடலில் ஊடுருவியிருக்கிறது.

(vii) வலது தோள்பட்டை எலும்புப் பகுதியில் 1 " x1/2 " x1/2 " அளவிலான வெட்டுக்காயம் தோல் மற்றும் தசையினைக்

கிழித்து, அடுத்து முள்ளெலும்பின் விளிம்புப் பகுதி வரை குறுக்காக இருந்தது.

(viii) வலது தோள்பட்டை எலும்புப் பகுதியின்மீது கிட்டத்தட்ட மையமாகவும், குறுக்காகவும் 1 1/2" x1 " x1/2" அளவிலான வெட்டுக்காயம் இருந்தது.

(ix) வலது தோள்பட்டை எலும்புக்கு சற்று கீழே வலது மார்பின்மீது செங்குத்தாகவும், தோள்பட்டை எலும்பைச் சுற்றியுள்ள பகுதியின் ஓரத்திலும் தோல் மற்றும் தசையைக் கிழித்துச்செல்லும் 1 1/2" x 1" x 1/2" அளவிலான வெட்டுக்காயம் இருந்தது.

(x) மேற்படி காயத்திற்கு பக்கவாட்டிலும், மேற்கூறிய காயத்திலிருந்து 2 " இடைவெளியில் அதற்கு நேரிணையாகவும் தோல் மற்றும் தசையைக் கிழித்துச்செல்லும் 11/2 " x1" x 1/2 " அளவிலான வெட்டுக்காயம் இருந்தது.

(xi) மேற்படி காயத்திற்கு பக்கவாட்டிலும் மற்றும் அதிலிருந்து 2 " இடைவெளியில் அதற்கு நேரிணையாகவும் தோல் மற்றும் தசையைக் கிழித்துச்செல்லும் 11/2 " x1 " x1/2 " அளவிலான வெட்டுக்காயம் இருந்தது.

(xii) வலது முதுகுப்பகுதியில் 10-ஆவது விலா எலும்புக்கு இடையே உள்ள பகுதியில் குறுக்காக 2 " x1 " x 1/2 " அளவில் வெட்டுக்காயம் இருந்தது.(xiii) இடது தோள்பட்டை எலும்புக்கடியில் 2" x1"x1/2 " அளவுக்கு தோல் மற்றும் தசையை ஆழமாகக் கிழித்துக்கொண்டுசெல்லும் செங்குத்தான வெட்டுக்காயம் இருந்தது.

(xiv) டி .12-இன் மட்டத்திலான வெட்டுக்காயம் 3 1/2 " × 1 " அளவில் குறுக்கான காயமாக தோல் மற்றும் தசைகளைக் கிழித்துக்கொண்டு எலும்பினை ஒட்டியவாறு இருந்தது.

(xv) எல் .2-இன் மட்டத்திலான வெட்டுக்காயமானது, 11/2 " x1 " x1/2 " அளவிலான குறுக்குக் காயமாக தோல் மற்றும் தசையில் வெட்டியிருந்தது.

(xvi) எல் .5-எஸ் .1-இன் மட்டத்திலான வெட்டுக்காயமானது 3 " x1/2 " அளவில் தோல், தசைகளைக் கிழித்துக் கொண்டு குறுக்குக் காயமாக எலும்பை ஒட்டி இருந்தது.

(xvii) புட்டப்பகுதியில் நடுக்கோட்டில் தசை ஆழத்திற்கு 1'x 1/2" x1/2" அளவிலான செங்குத்தான வெட்டுக்காயம்.

(xviii) மேற்படி காயத்திற்கு 2 " கீழே புட்டப்பகுதியில் நடுக்கோட்டில் தசையின் ஆழத்திற்கு 1 " x1/2 " x1/2 " அளவிலான செங்குத்தான வெட்டுக்காயம்.

(xix) காய எண் 16-க்கு சுமார் 1 " கீழே அதற்கு பக்கவாட்டில் 1 " x 1/ 2 " x 1/2 " அளவிலான வெட்டுக்காயம். "

மேற்கூறப்பட்ட காயங்களைப் பொறுத்தவரையிலான அவரது வாக்குமூலத்தில் அந்தக் காயங்கள் அனைத்தும் மரணத்திற்கு முந்தியவை எனவும் அவர் கருத்துரைத்தார். குறிப்பிடப்பட்டுள்ள காயங்கள் சடலக்கூறாய்வு சான்றிதழில் அடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சடலத்தின் பஞ்சநாமாவின் கைப்பற்றறிக்கை சாட்சியான திரு.ஜெகதீஷ்பாய் சர்மான்பாய் கமாலியா அ.சா.5-ஆ விசாரிக்கப்பட்டார். குற்ற நிகழ்வின் கைப்பற்றறிக்கை சாட்சியான திரு.ஹர்தாஸ்பாய் பிகாபாய் பெடாரியா அ.சா.6-ஆக விசாரிக்கப்பட்டார். அரசுத்தரப்பு, மஷாரிபாய் கோவிந்த்பாய் கரங்கியாவையும் அ.சா.20-ஆக விசாரித்தது. அவர் சம்பவ நாளன்று வயலில் இருந்தபோது சம்பவம் குறித்தும், அவர்கள் மீதான தாக்குதல் குறித்தும் தெரிவிக்கும் தொலைபேசி அழைப்பு, மாலை சுமார் 7.30 மணியளவில் இராஜ்ஷி மால்தியிடம் இருந்து வந்ததாகவும், மேலும், இராஜூபாபுவின் மாருதி வேனுடன் வருமாறு அவருக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும், அதன் பின்னர் அவரது மோட்டார் சைக்கிளில் அவர் கிராமத்திற்குச் சென்றதாகவும்

அவருடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.அவர் இராஜூபாபுவை சந்திக்க முடியாததால், இராஜூபாபுவை அவர் தொலைபேசியில் அழைத்து அகாவின் சாலையில் அமைந்துள்ள கலாபாயின் வயலுக்கு உடனடியாக அவரது மாருதிவேனுடன் வருமாறு வேண்டினார். அவர் சம்பவ இடத்தை அடைந்த போது மிதேஷ்பாய் மற்றும் இராஜ்ஷி மால்தி காயமுற்று இருந்ததையும், கோகல்பாய் இரத்தம் வழிந்த நிலையில் கிடந்ததையும் கண்டதாக அவரது வாக்குமூலத்தில் அவர் தெளிவாகக் கூறியுள்ளார்.மேலும், கலாபாயின் வயலில் விளக்கு இருந்ததென்றும், அதன் வெளிச்சம் சாலையின் மீது விழுந்து கொண்டிருந்ததென்றும் அவர் தெரிவித்தார். மரணமுற்றவரின் சகோதரர் அ.சா.21-ஆக விசாரிக்கப்பட்டார். அவரது வாக்குமூலத்தில் கோகல்பாய் ஹீரோ ஹோண்டா மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு சென்றிருந்ததாலும், மோட்டார் சைக்கிளில் வெளியூர் செல்வதற்கு அது அவருக்கு தேவைப்பட்டதாலும், கிராமத்திலுள்ள நாதுபாயின் கடையிலிருந்து நாணயம் போட்டு பேசும் தொலைபேசியிலிருந்து இராஜ்ஷியின் அலைபேசி எண்ணான 9825921960-க்கு அழைத்ததாகவும் அவர் கூறியுள்ளார்.வஜ்ஷிபாய் ராம்ஷியின் வயலில் கோகல்பாய் அவரது டிராக்டரின் மூலம் மண் இறக்கியதும், அதற்காக அவர் வாடகைத் தொகை ரூ.15,000/- கொடுக்காமல் இருந்துள்ளார் என்பதுமே சம்பவத்திற்கான காரணமென இந்தச் சாட்சியுங்கூட தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பூசல் இருந்ததால் சம்பவம் நிகழ்ந்து, அதன் விளைவாக கோகல்பாயின் கொலை நடந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. குற்றத்தைப் புலன்விசாரணை செய்தவரான திரு.இராஜேஷ்பாய் ஜேதாபாய் பார்மர் அ.சா.31-ஆக விசாரிக்கப்பட்டார். அவரும் சம்பவத்தைப் பற்றி அவருடைய வாக்குமூலத்தில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

18. அ.சா.18 மற்றும் 19 ஆகியோரது சாட்சியங்களின் படியும், சடலக்கூறாய்வு அறிக்கையின் படியும் இறந்துபோன நபரின் தலையில் காயம் இல்லையெனக் கூறியுள்ளபடியால், அ.சா.18 மற்றும் 19-இன் சாட்சியங்கள் ஏற்றுக்கொள்ளப்படக்கூடாது என்ற கற்றறிந்த வழக்குரைஞரின் வாதுரை ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை, ஏனென்றால், சடலக்கூறாய்வு அறிக்கையில் தலையின் பின்புறத்தில் கீழே காயம் உள்ளதாகக்

குறிப்பிடப்பட்டுள்ளது. மரணமுற்ற நபரை கோடரியால் தாக்க முயற்சிசெய்யப்பட்டுள்ளது. அது தலையின் மையத்தில் தாக்கியிருக்கவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கமுடியாது கோடரிதலையின் பின்புறத்தில் கீழே தாக்கியிருப்பதாக சடலக்கூறாய்வு அறிக்கையிலிருந்து தெளிவாகிறது. இந்நிலையில் மரணமுற்றவரும், காயமுற்றவர்களும் மோட்டார்சைக்கிளில் சென்றுக்கொண்டிருந்தபோது அவர்கள் மீது தாக்குதல் நடந்துள்ளது என்பது கவனிக்கத்தக்கதாகும். அது போலவே தலையின் நடுவே காயமில்லை என்பதால் மட்டுமே அ.சா.18 மற்றும் 19-இன் சான்றுரை புறந்தள்ளப்படவேண்டும் என்று கூறமுடியாது. சடலக்கூறாய்வு மேற்கொண்ட மருத்துவரும், மரணமுற்றவரின் மீது காணப்பட்ட காயங்கள் அனைத்தும் மரணத்திற்கு முந்தியவை என அவரது வாக்குமூலத்தில் தெளிவாகக் கூறியுள்ளார். அனைத்து சாட்சிகளின் ஒட்டுமொத்த சாட்சியத்தையும் பதிவிலுள்ள மருத்துவ மற்றும் இதர சான்றுகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்ந்தால், அரசுத்தரப்பு எதிரிகளின் குற்றத்தை நியாயமான சந்தேகத்திற்கிடமின்றி மெய்ப்பித்துள்ளது. அனைத்து எதிரிகளும் பொதுவான உட்கருத்துடன் குற்றம் புரிந்துள்ளனர்.குற்றத்தில்1, 2 மற்றும் 3-ஆம் எதிரிகளின் பங்கு குறித்து காயமுற்ற சாட்சிகளாலும், புலனாய்வு அலுவலரின் வாக்குமூலத்தினாலும் முழுமையாக உறுதிப்படுத்தப்படுகிறது. முக்கியமான சாட்சிகள் விரிவாகக் குறுக்கு விசாரணை செய்யப்பட்டிருந்த போதிலும், எதிர்நிலையாக ஏதும் வெளிக்கொணரப்படவில்லை. அ.சா.20-ஆன மசாரிபாயின் சான்றுரையை ஆராய்ந்தால், அது அ.சா.18, 19 மற்றும் 21-இன் சாட்சியத்தினால் முழுமையாக ஆதரிக்கப்படுகிறது. அவர்களின் சான்றுரை இயல்பானதும், நம்பத்தகுந்ததுமாகும் என்பது பதிவிலுள்ள சான்றுகளிலிருந்து தெளிவாகிறது, மேலும், அ.சா.18 மற்றும் 19-ஐ பொறுத்தவரையில், அவர்கள் சந்தர்ப்ப சாட்சிகள் எனக் கூறமுடியாது.மருத்துவவல்லுநரின் கருத்தின்படி அ.சா.18 மற்றும் 19 அடைந்த காயங்களும் தாமே விளைவித்துக் கொண்டவை அல்ல என்பதாகும். மேலும் விசாரிக்கப்பட்ட மருத்துவரின் கருத்தின்படியும் அனைத்து காயங்களும் முக்கியமான சான்றுப்பொருளான கத்தி மற்றும் கோடரியாலே விளைவிக்கப்பட்டிருப்பதற்கு சாத்தியம் இருந்ததாகவும் தெளிவாகிறது. மேலும், இரத்தநீரியல் அறிக்கையிலிருந்து, மரணமுற்றவரின்

மற்றும் 1 மற்றும் 2-ஆம் எதிரிகளின் உடைகளில் காணப்பட்ட இரத்தப்பிரிவு ஒன்றாக உள்ளது என்பதும் கவனிக்கத்தக்கதாகும். 3-ஆம் எதிரியின் இருப்பைப் பொறுத்தவரையில், பதிவில் உள்ள ஒட்டுமொத்த வாய்மொழி சாட்சியத்தையும் கருத்தில் கொண்டால், சம்பவ இடத்தில் அவரது இருப்புங்கூட நியாயமான சந்தேகங்களுக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது.

19. அ.சா .18 மற்றும் 19-இன் வாக்குமூலங்களில் முக்கியமான முரண்பாடுகள் உள்ளன என்ற கற்றறிந்த வழக்குரைஞரின் வாதத்தில் நாங்கள் எவ்வித சாராம்சமும் காணவில்லை.முரண்பாடுகள் என முன்கொணரக் கோரப்பட்ட முக்கியத்துவமற்ற முரண்பாடுகள், அவர்களின் சாட்சியத்தைப் புறந்தள்ளுவதற்கு அடிப்படையாக அமையாது.எதிர்மேல்முறையீட்டாளரான மாநில அரசுக்கான கற்றறிந்த வழக்குரைஞரால் சார்வுறப்பட்ட மொஹர் என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையானது அரசுத்தரப்பு வழக்கினை ஆதரிக்கிறது.மேற்கூறப்பட்ட தீர்ப்புரையில் காயமுற்ற சாட்சியினை நம்ப மறுப்பதற்கு உறுதியான சாட்சியம் இருக்கவேண்டும் என இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.தீர்ப்புரையின் பத்தி 11 கீழ்வருமாறு:

> "11. காயமுற்ற சாட்சியின் சான்றுரையில் அதற்கே உரிய செயல்விளைவும் முக்கியத்துவமும் இருக்கும்.சாட்சி அவரது உடலில் காயங்கள் அடைந்துள்ளார் என்ற சங்கதியே அவர் சம்பவ இடத்தில் இருந்தார் என்பதையும் அவரே சம்பவத்தை நேரில் கண்டுள்ளார் என்பதையும் காட்டுகிறது.காயமுற்ற சாட்சியினை நம்ப மறுப்பதற்கு உறுதியான சாட்சியம் இருக்க வேண்டும். அதுபோலவே, சாட்சியின் வாக்குமூலத்தில் உள்ள ஒவ்வொரு முரண்பாடும் கடுமையான பாதிப்பேற்படுத்திவிடுமெனக் கருத முடியாது. அரசுத்தரப்பு வழக்கினை அடிப்படையில் பாதிக்காத முரண்பாடு, ஏதொரு பலவீனத்தையும் ஏற்படுத்தாது. தற்போதைய வழக்கில் மு.த.அ.-யிலும், அ.சா.1-இன் குறுக்கு விசாரணையிலும் அ.சா.4-இன்தரப்பில் உள்ள முரண்பாடு போதியளவில் தெளிவாக்கப்பட்டுள்ளது. அ.சா.1 குறுக்குவிசாரணையில் அவரது சகோதரரான இராம்ஆவாத்துக்கு(1) அ.சா.4 ஜெகதீஷ், (2)ஜெகர்நாத் மற்றும் (3) சுரேஷ் என மூன்று

மகன்கள் இருந்ததாக தெளிவாகக் கூறியுள்ளார். எனினும், இந்தச் சாட்சி ஜெகர்ஜித்துக்கு ஒரேயொரு பெயர்தான் இருந்தது எனத் தெரிவித்துள்ளார். ஆயினும், சம்பவத்தின் போது இராம்ஆவாத்தின் மகனான ஜெக்ஜித் (எ) ஜெகர்ஜித் பால் கறந்து கொண்டிருந்ததாகவும், அவர் ஜெகதீஷ் என்றும் அழைக்கப்படுவார் எனவும் அ.சா.2 விபூதி தெரிவித்துள்ளார். பாலி(அ.சா.3), அவரை ஜெக்ஜித் மற்றும் ஜெக்தீஷ் என்று குறிப்பிட்டுள்ளார். அ.சா.4-ம் அவரது பெயரை ஜெக்தீஷ் என்றே கூறியுள்ளார்

நரேஷ் மற்றும் பலர் என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையின் மீதும் எதிர்மேல்முறையீட்டாளரான மாநில அரசுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் சார்வுற்றார். மேற்படி தீர்ப்புரையில், நம்பத்தக்க காரணங்களை அளிக்காமல் காயமுற்ற சாட்சிகளின் சாட்சியத்தைப் புறந்தள்ளமுடியாது என இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. தீர்ப்புரையின் தொடர்புடைய பத்திகள் 27 மற்றும் 30 கீழ்க்காணுமாறு:

"27. காயமுற்ற சாட்சியானவர் முக்கியமான சாட்சி என்ற அடிப்படையில் அவருடைய சாட்சியத்திற்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும், எனவே, அவரின் இருப்பு சந்தேகிக்கப்படக்கூடாது.பொதுவாக அவரது வாக்குமூலம் மிகவும் நம்பத்தகுந்ததாக கருதப்படும், மேலும், அவர் வேறொருவரை பொய்யாகச் சிக்கவைப்பதன் பொருட்டு உண்மையான எதிரியைப் பாதுகாக்கிறார் என்பதற்கு சாத்தியமில்லை.காயமுற்ற சாட்சியின் வாக்குமூலத்தில் அதற்கே உரிய செயல்விளைவும் முக்கியத்துவமும் இருக்கும், ஏனெனில், அவர் சம்பவ இடத்தில் அச்சமயத்திலேயே காயங்கள் அடைந்துள்ளார்.மேலும், சம்பவம் நிகழ்ந்தபோது அவர் அங்கே இருந்தார் என்னும் அவரது வாக்குமூலத்தை இது மெய்ப்பிக்க உதவுகிறது.எனவே காயமுற்ற சாட்சியின் சாட்சியத்திற்கு சட்டத்தில் சிறப்புத் தகுதி அளிக்கப்பட்டுள்ளது. ஒரு குற்றச் செய்கைக்காக மூன்றாம் நபரை பொய்யாகச் சிக்கவைக்கவேண்டும் என்பதற்காக மட்டுமே சாட்சியானவர் உண்மையான எதிரியை தண்டனையிலிருந்து தப்பிக்கவிட ஆசைப்படவோ, விரும்பவோமாட்டார் எனவே, காயமுற்ற சாட்சியின் சாட்சியத்தில் முக்கியமான முரண்பாடுகளோ, மாறுபாடுகளோ இருக்கின்றன என்ற

அடிப்படையில் அவரது சாட்சியத்தை நிராகரிப்பதற்கான காரணங்கள் இல்லாவிட்டால் அவரது சாட்சியத்தின் மீது சார்வுறப்படவேண்டும்.(காண்க: ஜர்னெய்ல் சிங் -எதிர்-பஞ்சாப் மாநில அரசு [(2009) 9 எஸ்.சி.சி. 719:(2010) 1 எஸ்.சி. சி. (கிரிமினல்) 107: (ஏ.ஐ.ஆர்.2010, எஸ்.சி.3699)] பால்ராஜே-எதிர்-மஹாராஷ்டிர மாநில அரசு ((2010) 6 எஸ்.சி.சி .673:(2010) 3 எஸ்.சி.சி. (கிரிமினல்) 211:(2010 கிரிமினல் எல்.ஜெ. 3443 (எஸ்.சி.))] மற்றும் அப்துல் சயீத்-எதிர் ம.பி. மாநில அரசு [(2010) 10 எஸ்.சி.சி. 259:(2010) 3 எஸ்.சி.சி. (கிரிமினல்) 1262 (2011 கிரிமினல் எல்.ஜெ (சப்ளி) 793 (எஸ்.சி.)] .....

30. அனைத்து குற்றவியல் வழக்குகளிலும், காலங்கடந்துவிட்டதன் காரணமாக ஏற்படும் நினைவாற்றல் தவறுதல் அல்லது சம்பவத்தின்போது உண்டாகும் அதிர்ச்சி மற்றும் பேரச்சத்தினால் ஏற்படும் மனமாற்றத்தின் காரணமாக கவனித்தலில் இயல்பாக ஏற்படும் தவறின் காரணமாக சாட்சிகளின் சான்றுரைகளில் சாதாரண முரண்பாடுகள் நிகழ்வதற்குரியவையே.விடுபாடுகள் முரண்பாடுகளுக்கு வழிகோலி, சாட்சி மற்றும் பிற சாட்சிகளின் உண்மைத்தன்மை குறித்து கடும் சந்தேகத்தை உருவாக்கி, நீதிமன்றத்தில் சான்றுரைக்கையில் முக்கியமானவற்றை மேம்படுத்திக்கூறும்போது அத்தகைய சாட்சியத்தின்மீது சார்வுறுவது பாதுகாப்புக்குரியதாய் இருக்காது. எனினும், அற்பமான விடயங்களின்பேரிலான, அரசுத்தரப்பு வழக்கின் கருப்பொருளை பாதிக்காத சிறு முரண்பாடுகள், மாறுபாடுகள், மிகைப்படுத்திக் கூறுதல் அல்லது மேம்படுத்திக்கூறுதல் ஆகியவை சாட்சியத்தை ஒட்டுமொத்தமாக நிராகரிப்பதற்கான அடிப்படை காரணங்களாக அமைந்துவிடக்கூடாது. சாட்சியின் நம்பகத்தன்மை குறித்து உயர் நீதிமன்றம் அதன் கருத்துரையை வகுத்தமைத்து, அவருடைய வாக்குமூலம் நம்பிக்கைக்குரியதா? என்பது பற்றிய காண்முடிவினைப் பதிவு செய்ய வேண்டும்.

"9. மிகைப்படுத்திக் கூறப்படுபவைகளும் சாட்சியத்தை எளிதில் வலுவற்றதாக்கிவிடாது. ஆனால், ஒட்டுமொத்த சாட்சியத்தையும், நம்பகத்தன்மை எனும் உரைகல்லின் மீது உரசிப்பார்த்து கடுஞ்சோதனைக்கு உட்படுத்தும்போது அது அரசுத்தரப்புக் கூற்றின் நம்பகத்தன்மையை ஆய்வு செய்யும் ஒரு காரணியாக அமையலாம். "**[பதிப்பு**:பீஹாரிநாத் கோஸ்வாமி-

எதிர்-ஷிவ்குமார்சிங் என்ற வழக்கில் தீர்மானிக்கப்பட்டவாறு (2004) 9எஸ்.சி.சி. 186: (ஏ.ஐ.ஆர்.ஆன்லைன் 2004எஸ்.சி.89), பக்கம்192, பத்தி9]. ஆகவே, சாட்சியின் வாக்குமூலங்களிலுள்ள சிறிய வேறுபாடுகளை, மேம்படுத்திக் கூறப்பட்டவை எனக் கூறிவிடமுடியாது, ஏனெனில், அவை முன்னதாக சாட்சியால் முன் வைக்கப்பட்ட வாக்குமூலத்தின் விரிவாக்கமாக இருக்கலாம். முக்கியமான விவரங்களில், அதாவது, வழக்கின் மூலம்வரை செல்கின்ற/அரசுத்தரப்பு வழக்கின் கருப்பொருளை அல்லது விசாரணையை முதன்மையாக பாதிக்கின்ற முரண்பாடுகளுக்கு நிகரான விடுபாடுகள், சாட்சியின் சான்றுரையினை நம்பத்தகாததாக செய்கிறது. (பார்க்க: மாநிலஅரசு-எதிர்-சரவணன் [(2008)17 எஸ்.சி.சி.587: (2010) 4 எஸ்.சி.சி. (கிரிமினல்) 580: ஏ.ஐ.ஆர்.2009 எஸ்.சி.152], ஆறுமுகம்-எதிர்-மாநில அரசு[(2008) 15 எஸ்.சி.சி.590: (2009)3 எஸ்.சி.சி. (கிரிமினல்)1130: ஏ.ஐ.ஆர்.2009 எஸ்.சி.331], மஹேந்திரபிரதாப்சிங்-எதிர்-உ.பி.மாநிலஅரசு [(2009)11எஸ்.சி.சி.334:(2009)3எஸ்.சி.சி. (கிரிமினல்) 1352: (2009 ஏ.ஐ.ஆர்.எஸ்.சி.டபிள்யூ. 2849)] மற்றும் சுனில்குமார் சாம்புதயாள் குப்தா (டாக்டர்)-எதிர்-மஹாராஷ்டிரமாநிலஅரசு[(2010) 13 எஸ்.சி.சி.657: ஜெ.டி. (2010) 12 எஸ்.சி.287 (2010ஏ.ஐ.ஆர்.எஸ்.சி.டபிள்யூ.7049)].'

மேலும், **நாராயண்சேதன்ராம் சௌதரி மற்றும் ஒருவர்- எதிர்-மஹாராஷ்டிர மாநில அரசு [(2000) 8 எஸ்.சி.சி.457: ஏ.ஐ.ஆர்.2000 எஸ்.சி.3352)]** என்ற வழக்கில், குற்றவிசாரணையில் சாட்சியத்தை மதிப்பீடு செய்கையில் வாக்குமூலங்களில் இருக்கும் சிறிய முரண்பாடுகளின் விளைவுகளை இந்நீதிமன்றம் பரிசீலித்துள்ளது. மேற்படி தீர்ப்புரையில் முக்கியமான விவரங்களில் இருக்கும் முரண்பாடுகள் மட்டுமே சாட்சிகளின் சான்றுரையை நம்பாதிருப்பதற்குக் காரணமாக அமையலாமே தவிர, சிறிய முரண்பாடுகள் அல்ல. தீர்ப்புரையின் பத்தி 42-இன் தொடர்புடைய பகுதி பின்வருமாறு:

> "42. முக்கியமான விவரங்களிலுள்ள முரண்பாடுகளுக்கு நிகரான அத்தகைய விடுபாடுகளை மட்டுமே சாட்சியின் சான்றுரையை

நம்பமறுப்பதற்கு பயன்படுத்தலாம்.காவல்துறைக்கு அளித்த வாக்குமூலத்திலுள்ள விடுபாடுகளே சாட்சியின் வாக்குமூலத்தினை நம்பிக்கையற்றதாக்கிவிடாது.முக்கியமான விவரங்களின்பேரில் சாட்சியால் நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட கூற்றானது, முன்னர் அவரால் தெரிவிக்கப்பட்ட வாக்குமூலத்திலிருந்து வேறுபடும்போது, அரசுத்தரப்பின் வழக்கானது சந்தேகத்திற்குட்படுமேயன்றி வேறொன்றுமில்லை.உண்மையான சாட்சிகளின் வாக்குமூலங்களில் சிறிய முரண்பாடுகள் ஏற்படத்தக்கவையே, ஏனெனில், நினைவாற்றல் சில நேரங்களில் தவறிவிடலாம், மேலும், கவனிக்கும் திறனுணர்வு நபருக்கு நபர் மாறுபடும்.தற்போதைய வழக்கிலுள்ளவாறு, முன்னர் அளிக்கப்பட்ட வாக்குமூலத்தில் உள்ள விடுபாடுகள் முக்கியத்துவமற்ற விவரங்கள் எனக் கண்டறியப்பட்டால், அவை அ.சா.2-இன் சான்றுரையில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது. சாட்சியின் வாக்குமூலத்தில் ஏதேனும் முக்கியமான சங்கதியில் முரண்பாடு இருந்தாலும், அது அத்தகைய சாட்சியின் சான்றுரையை முழுவதுமாக நிராகரிப்பதற்கு காரணமாக அமைந்துவிடாது.....”

20. **இந்நீதிமன்றத்தால் வகுக்கப்பட்டவாறு மேற்கூறிய அகவுரையைப் பதிவிலுள்ள சான்றாதாரத்துடன் பொருத்திப்பார்க்கையில், அரசுத்தரப்பு மேல்முறையீட்டாளர்களான அனைத்து எதிரிகளுக்கும் எதிரான வழக்கினை நியாயமான சந்தேகங்களுக்கிடமின்றி மெய்ப்பித்துவிட்டது என்று நாங்கள் தெளிவாகவே கருதுகிறோம்.மோட்டார் சைக்கிளையும், மேலும் பாதிக்கப்பட்டவர்களில் ஒருவரின் தங்கச் சங்கிலியை கைப்பற்றாததுமான விடுபாடுகள் மட்டுமே, அரசுத்தரப்பால் முக்கிய சாட்சிகளாக விசாரிக்கப் பட்டவர்களின் சான்றுரையின்மீதான நம்பிக்கையை இழப்பதற்கு காரணமாக அமைந்துவிடுவதில்லை, அவர்களின் வாக்குமூலம் உறுதிவாய்ந்ததாகவும், இயல்பாகவும், நம்பத்தகுந்ததாகவும் உள்ளது.**

21. அவ்விடயத்தைக் கருத்திற்கொண்டு, உயர் நீதிமன்றத்தால் உறுதிசெய்யப்பட்டவாறே, மேல்முறையீட்டாளர்களுக்கெதிராக தண்டனைத் தீர்ப்பினை பதிவு செய்து விசாரணை நீதிமன்றத்தால் எடுக்கப்பட்ட முடிவுடன் நாங்கள் முழுமையாக உடன்படுகிறோம்.எனவே, மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட ஒருங்கியல்வான காண்முடிவில் எவ்வித தலையீடும் கோரப்படவில்லை. ஏற்கெனவே விவாதிக்கப்பட்டவாறு மரணமுற்றவருக்கும் எதிரி ஒருவருக்குமிடையே சம்பவம் நடப்பதற்கு சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பு டிராக்டருக்கு வாடகை செலுத்துவது தொடர்பாக சண்டை நடந்துள்ளது என்பதும் தெளிவு. மேலும், அவர்களுக்கிடையே பகைமை இருந்துவந்துள்ளது எனவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதுவே குற்றத்திற்கான உட்கருத்தாகும். அதற்கேற்ப அனைத்து எதிரிகளும் குற்றத்தில் பங்கெடுத்ததுடன், பொது உட்கருத்துடன் குற்றம் புரிந்துள்ளனர் என்பதை அரசுத்தரப்பு நியாயமான சந்தேகங்களுக்கிடமின்றி மெய்ப்பித்துள்ளது. விசாரணை நீதிமன்றமும் உயர்நீதிமன்றமும் சட்டத்தின்பேரிலோ அல்லது சங்கதிகளின் பேரிலோ ஏதொரு பிழையும் புரியவில்லை, அவ்வகையில் அவை இந்நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட வேண்டியதாகிறது. வழக்கின் சங்கதிகளையும், பதிவில் உள்ள சான்றினையும் கருத்திற்கொண்டு மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞரால் சார்வுறப்பட்ட தீர்ப்புரைகளைப் பொறுத்தமட்டில், மேற்கூறிய தீர்ப்புரைகள் மேல்முறையீட்டாளர்களின் வழக்குக்கு எவ்வித ஆதரவும் அளிக்கவில்லை என நாங்கள் கருதுகிறோம்.

22. **மேற்கூறிய காரணங்களுக்காக இம்மேல் முறையீடுகளில் நாங்கள் எவ்வித தகுதிப்பாட்டையும் காணவில்லை, அதற்கிணங்க அவை தள்ளுபடி செய்யப் படுகின்றன**.

மாண்புமிகு நீதியரசர் திரு. அசோக் பூஷன்

மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர். சுபாஷ் ரெட்டி

புதுதில்லி

28.04.2021.

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும். "